**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, தமிழ்நாடு**

**அனுப்புநர்**

**மாநில திட்ட இயக்குநர்,**
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
மாநில திட்ட இயக்ககம்,
டிபிஐ வளாகம்,
சென்னை – 06.

பெறுநர்

**முதன்மைக் கல்வி அலுவலர்,**
அனைத்து மாவட்டங்கள்

**ந.க. எண். 449 / C7 / SS /** இல்லம் தேடிக் கல்வி **/ 2021 நாள்: 21.03. 2022**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள்:** இல்லம் தேடிக் கல்வி திட்டம் – தன்னர்வலர்கள், சமூக அமைப்புகளைச் சார்ந்தவர்கள் மற்றும் ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல் – குறுவள மைய அளவில் நடைபெற்ற கல்வி கண்காட்சியினை ஆவணப்படுத்துதல் மற்றும் சான்றிதழ் அச்சிட்டு வழங்குதலின் செலவின விவரம் – நிதி விடுவித்தல் – சார்பு.

**பார்வை :** இவ்வலுவலக கடித ந.க.எண் 449/C7/SS/ /2021 , நாள்: 08.02.2022

***********

இல்லம் தேடிக் கல்வித் திட்டம், பள்ளி மாணவர்களிடத்திலும், பெற்றோர்கள் மத்தியிலும் மற்றும் ஆசிரியர்களிடத்தும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இதுநாள்வரை 6.47 இலட்சம் தன்னார்வலர்கள் இந்த திட்டத்தில் இணைந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்து பதிவு செய்துள்ளனர். 11.03.22 அன்று வரை, ஒரு இலட்சத்து எழுபத்து எட்டாயிரத்து ஐநூற்றி இருபத்து ஐந்து (1,78,525) இல்லம் தேடிக் கல்வி மையங்கள் ஆரம்பிக்கப்பட்டு, தன்னார்வலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தோராயமாக முப்பத்தைந்து இலட்சம் (35,00,000) மாணவர்கள் இதன் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

மேலும் இத்திட்டத்தில், சில சமூக அமைப்புகளைச் சார்ந்தவர்கள், மாநில, மாவட்ட, வட்டார அளவிலான ஆலோசணைக்குழு உறுப்பினர்களாகவும் மற்றும் ஆசிரியர்கள் ஒருங்கிணைப்பு பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர். அகையால் இத்திட்டத்தில் இணைந்துள்ள அனைத்து தன்னார்வலர்கள், ஊக்குநர்கள், மற்றும் ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் அடையாள அட்டை வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் பார்வையில் கண்டுள்ள கடிதத்தின்படி, குறுவளமைய அளவில் கல்விக் கண்காட்சியினை நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு குறுவள மைய அளவில் நடைபெறும் கல்வி கண்காட்சியினை ஆவணப்படுத்திடவும், அதில் தங்களது படைப்புகளை இடம்பெறச் செய்த தன்னார்வலர்ளுக்கு சான்றிதழ் வழங்கிடவும் காணொளி கூட்டத்தின் வாயிலாக அறிவுறுத்தப்பட்டது.

மேற்படி அனைத்து தன்னர்வலர்கள், ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஊக்குநர்களுக்கு தேவையான அடையாள அட்டைகள் மற்றும் சான்றிதழ்களை உடனடியாக வழங்கிடுமாறும், கீழ்க்காணும் குறிப்புகளை முறையாக பின்பற்றி அடையாள அட்டை, சான்றிதழ் மற்றும் ஆவணப்படுத்துதல் சார்ந்து செலவினம் மேற்கொள்ளப்பட்டு அதன் விவரத்தை மாநில திட்ட இயக்கத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குறிப்பு

1. அடையாள அட்டை மற்றும் சான்றிதழுக்கான வடிவமைப்பு, மாநில திட்ட இயக்ககம் மூலம் வடிவமைக்கப்பட்டு அதனுடைய working file அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதிலுள்ள வண்ணங்கள், வடிவமைப்பில் மாற்றம் செய்யாமல் பணியாளர்களின் பெயர், பதவி, மையத்தின் விவரங்கள், முகவரி, புகைப்படம், கையொப்பத்தில் மட்டும் அவரவர்களின் விவரங்களை மாற்றம் செய்து முதன்மை கல்வி அலுவலர்களின் கையொப்பம் இட்டு வழங்கப்பட வேண்டும்.
2. **ID Card Specification:** PVC ID card (standard normal ID card size) with card holder and Multi colour printed rope என்ற தன்மையில் ஒரு அடையாள அட்டைக்கான செலவினம் ரூ. 55 க்கு மிகாமல் மேற்கொள்ளப்பட வேண்டும். மாவட்ட வாரியான தன்னார்வலர்கள், ஊக்குநர்கள், மற்றும் ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் செலவின விவரம் இணைக்கப்பட்டுள்ளது.
3. மேலும், கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும்.
   அ) இந்த அடையாள அட்டையை வேறு எந்தவிதமான செயலுக்கும் உபயோகிக்க கூடாது.
   ஆ) இப்பணி முடிந்த பிறகு, அடையாள அட்டையை தவறாமல் உரிய மாவட்ட கல்வி அலுவலரிடம் அளிக்கப்படவேண்டும்.
   இ) அடையாள அட்டை மாற்றத்தக்கதல்ல.

ஈ) அடையாள அட்டை தொலைந்து விட்டால், உடனடியாக உரிய அலுவலரிடம் எழுத்து மூலம் தகவல் அளிக்கப்பட வேண்டும்.

உ) அடையாள அட்டை எவரிடம் கிடைத்தாலும், அதனை அருகிலுள்ள காவல் நிலையத்தில் ஒப்படைத்து, அத்தகவலினை உரிய மாவட்ட கல்வி அலுவலரிடம் தெரிவிக்கப்பட வேண்டும்.

4. அடுத்தாக குறுவள மைய அளவில் நடைபெற்ற கல்வி கண்காட்சியில் தங்களது படைப்புகளை இடம்பெறச் செய்த தன்னார்வலர்களுக்கு சான்றிதழ் வழங்கிடும் போது A4 size with 300 GSM & multi-colour printed என்ற தன்மையில் ஒரு சான்றிதழுக்கான செலவினம் ரூ. 5 க்கு மிகாமல் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான செலவினம், பார்வையில் கண்டுள்ள கடிதத்தின்படி, தன்னார்வலர்களுக்கு கேடயம் வழங்குவதற்காக ஏற்கெனவே மாவட்டங்களுக்கு IEC தலைப்பின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. குறுவளமைய அளவில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியினை ஆவணப்படுத்துதல் சார்ந்து இரண்டு ஆவணப்படங்களுக்கு ரூ. 10,000 க்கு மிகாமல் செலவினம் மேற்கொள்ளப்பட ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டது. இதற்கான செலவினத்தை அந்தந்த மாவட்டங்களின் IEC தலைப்பின் கீழ் அல்லது சில்லரை செலவின நிதியின் கீழ் மீதமுள்ள தொகையிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

**மாநில திட்ட இயக்குநருக்காக**

21/03/2

## ID cards to ITK volunteers, CSOs and Teacher Coordinators

| S.NO | DISTRICTS | No. of Blocks | No.of Educational Districts | No.of Teacher Coordinators | No.of CSOs | No.of Volunteers | Total No.of ID Cards | Unit Cost ( in lakh) | Total Amount ( in lakh) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ARIYALUR | 6 | 3 | 15 | 90 | 2622 | 2727 | 0.0006 | 1.500 |
| 2 | CHENGALPATTU | 9 | 3 | 21 | 135 | 4033 | 4189 | 0.0006 | 2.304 |
| 3 | CHENNAI | 10 | 5 | 25 | 150 | 2427 | 2602 | 0.0006 | 1.431 |
| 4 | COIMBATORE | 15 | 4 | 34 | 225 | 6572 | 6831 | 0.0006 | 3.757 |
| 5 | CUDDALORE | 14 | 4 | 32 | 210 | 6640 | 6882 | 0.0006 | 3.785 |
| 6 | DHARMAPURI | 8 | 3 | 19 | 120 | 5848 | 5987 | 0.0006 | 3.293 |
| 7 | DINDIGUL | 16 | 4 | 36 | 240 | 6491 | 6767 | 0.0006 | 3.722 |
| 8 | ERODE | 14 | 5 | 33 | 210 | 6501 | 6744 | 0.0006 | 3.709 |
| 9 | KALLAKURICHI | 8 | 3 | 19 | 120 | 4936 | 5075 | 0.0006 | 2.791 |
| 10 | KANCHEEPURAM | 5 | 2 | 12 | 75 | 3705 | 3792 | 0.0006 | 2.086 |
| 11 | KANNIYAKUMARI | 9 | 4 | 22 | 135 | 3464 | 3621 | 0.0006 | 1.992 |
| 12 | KARUR | 8 | 2 | 18 | 120 | 3029 | 3167 | 0.0006 | 1.742 |
| 13 | KRISHNAGIRI | 10 | 4 | 24 | 150 | 7997 | 8171 | 0.0006 | 4.494 |
| 14 | MADURAI | 15 | 4 | 34 | 225 | 6369 | 6628 | 0.0006 | 3.645 |
| 15 | MAYILADUTHURAI | 5 | 2 | 12 | 75 | 2181 | 2268 | 0.0006 | 1.247 |
| 16 | NAGAPATTINAM | 6 | 1 | 13 | 90 | 2361 | 2464 | 0.0006 | 1.355 |
| 17 | NAMAKKAL | 15 | 2 | 32 | 225 | 4553 | 4810 | 0.0006 | 2.646 |
| 18 | PERAMBALUR | 4 | 2 | 10 | 60 | 1860 | 1930 | 0.0006 | 1.062 |
| 19 | PUDUKKOTTAI | 13 | 3 | 29 | 195 | 6224 | 6448 | 0.0006 | 3.546 |
| 20 | RAMANATHAPURAM | 11 | 3 | 25 | 165 | 3309 | 3499 | 0.0006 | 1.924 |
| 21 | RANIPET | 8 | 2 | 18 | 120 | 3611 | 3749 | 0.0006 | 2.062 |
| 22 | SALEM | 21 | 5 | 47 | 315 | 10466 | 10828 | 0.0006 | 5.955 |
| 23 | SIVAGANGAI | 12 | 3 | 27 | 180 | 3516 | 3723 | 0.0006 | 2.048 |
| 24 | TENKASI | 10 | 2 | 22 | 150 | 2093 | 2265 | 0.0006 | 1.246 |
| 25 | THANJAVUR | 15 | 4 | 34 | 225 | 6764 | 7023 | 0.0006 | 3.863 |
| 26 | THE NILGIRIS | 4 | 2 | 10 | 60 | 1407 | 1477 | 0.0006 | 0.812 |
| 27 | THENI | 8 | 3 | 19 | 120 | 2231 | 2370 | 0.0006 | 1.304 |
| 28 | THOOTHUKKUDI | 13 | 3 | 29 | 195 | 2665 | 2889 | 0.0006 | 1.589 |
| 29 | TIRUCHIRAPPALLI | 16 | 4 | 36 | 240 | 6110 | 6386 | 0.0006 | 3.512 |
| 30 | TIRUNELVELI | 11 | 3 | 25 | 165 | 2224 | 2414 | 0.0006 | 1.328 |
| 31 | TIRUPATTUR | 6 | 2 | 14 | 90 | 3776 | 3880 | 0.0006 | 2.134 |
| 32 | TIRUPPUR | 13 | 4 | 30 | 195 | 7143 | 7368 | 0.0006 | 4.052 |
| 33 | TIRUVALLUR | 14 | 5 | 33 | 210 | 7893 | 8136 | 0.0006 | 4.475 |
| 34 | TIRUVANNAMALAI | 18 | 5 | 41 | 270 | 9375 | 9686 | 0.0006 | 5.327 |
| 35 | TIRUVARUR | 10 | 2 | 22 | 150 | 3320 | 3492 | 0.0006 | 1.921 |
| 36 | VELLORE | 8 | 1 | 17 | 120 | 4114 | 4251 | 0.0006 | 2.338 |
| 37 | VILLUPURAM | 14 | 3 | 31 | 210 | 7000 | 7241 | 0.0006 | 3.983 |
| 38 | VIRUDHUNAGAR | 11 | 4 | 26 | 165 | 3695 | 3886 | 0.0006 | 2.137 |
| | Total | **413** | **120** | **946** | **6195** | **178525** | **185666** | | **102.116** |

21/03/22